DECEMBER 2024 **P/ID 35317/PTL2G**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்கட்கு, முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. சகடக் கால் - பொருள் கூறுக.

2. நாலடி எந்தச் சமயத்தாரால் ஆக்கப்பட்டது?

3. அயில் என்று பழமொழி எதைக் குறிக்கின்றது?

4. பாண்சேரி - பொருள் சுட்டுக.

5. ஆழி என்பது யாது?

6. நான்மணிக் கடிகை எந்தப் பாவால் ஆனது?

7. துழாய் மாலையான் - யார்?

8. துறத்தல் என்றால் என்ன?

9. பணைத் தோள் - பொருள் சுட்டுக.

10. தந்தை, தாய்ப் பேண் - கருத்துரைக்க.

11. கேள்வி முயல் என்று அவ்வை கூறுவது யாது?

12. மீதூண் - சொற்பொருள் எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்கட்கு முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. 'ஈயக் குறையாதது கல்வி' என்று நாலடியார் போற்றுமாற்றை விளக்குக.

14. நாலடியாரின் மொழிநடையை எடுத்துரைக்க.

15. சோழன் முறைசெய்ததைப் பழமொழி எவ்வாறு போற்றுகின்றது?

16. 'மெய்ப்பொருளை உணர அறிவும் முயற்சியும் தேவை' என்று பழமொழி உணர்த்துவது யாது?

17. நான்மணிக்கடிகை கருத்துப் பெட்டமாகத் திகழுமாற்றை நிறுவுக.

18. இனிய பண்புகளாக இனியவை நாற்பது கூறுவன யாவை?

19. இல்லறமே நல்லறம் என்று அவ்வையார் அறுவுறுத்துவதை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்கட்கு 500 சொற்களில் விடையெழுதுக.

20. நாலடியாரைத் திருக்குறளோடு ஒப்பிட்டு ஆய்க.

21. நிறைகுடம் நீர் தளும்பாது என்று பழமொழி சுட்டுவதை விளக்குக.

22. தீங்குரைக்கும் நாவிற்கு நல்குரவு இல் என்று பழமொழி விளக்குவது யாது?

23. செய்யத்தக்கனவாக நான்மணிக்கடிகை வகுத்துரைப்பன யாவை?

24. அறநூற் கருத்துகள் மானுட மேன்மையை ஊக்குவிப்பதைத் திறனாய்க.

———————